CONNEMARA PUBLIC LIBRARY
2 JAN 1957
MADRAS

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட்; திருவல்லிக்கேணி, மதராஸ்.

—: o :—

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 19 } ஜய ஹூ ஐப்பசி மீ 1954 அக்டோபர் { பகுதி 7

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மௌன வாசிப்பு—I<br>V. நடராஜன் | ... 95 |
| 2. | கணக்கு: கற்பித்தல்<br>T. S. ராஜகோபாலன், B.A., L.T. | ... 99 |
| 3. | செய்தித் திரட்டு | ... 102 |
| 4. | பத்திராதிபர் குறிப்பு | ... 105 |

3 / 1-55

MEMBERS OF THE JOURNAL COMMITTEE

Sri S. NATARAJAN
" R. KRISHNAMURTHY
" K. KURUVILA JACOB
" T. P. SRINIVASAVARADAN
" V. NATARAJAN
" V. ARUNAJATAI
" L. MARIAPRAGASAM

Sri S. MARIA JOSEPH
" J. VAIDYANATHAN
" G. SRINIVASACHARI
" C. RANGANATHA AIYENGAR, *Secretary*
" V. B. MURTHI, *Asst. Secretary.*

உள் நாடு: வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதி ரூ. 0—4—0

## சந்தாதார்களுக்கு அறிக்கை

1954 அக்டோபர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை—M. 3.
வட ஆற்காடு—NA. 3, 23-A, 24, 49.
தென் ஆற்காடு—SA. 28.
கோயம்புத்தூர்—Co. 3.
மதுரை—Md. 12.
சேலம்—S. 33.
தஞ்சாவூர்—Tan. 2, 3, 8, 19, 49, 98, 99, 100.
திருநெல்வேலி—Tin. 33.
திருச்சிராப்பள்ளி—Tri. 38.

குறிப்பு :—ஷை சந்தாதார்களும் சந்தா பாக்கியுள்ள மற்ற சந்தாதார்களும் தங்கள் சந்தாத் தொகையை டிசம்பர் மாத முடிவிற்குள் கட்டிவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அடுத்த இதழை வி. பி. யில் அனுப்ப நேரிடுமாகையால் சந்தாவை முன்கூட்டியே செலுத்திவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் சந்தா அனுப்ப அசௌகரியமுள்ளவர்கள் செலுத்தக்கூடிய தவணையை முன்பாகவே தெரிவிக்கலாம்.

—பத்திராதிபர்


**ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்**

**நமது தாய்மொழி வாசகம்**

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

| | | | அ. | பை |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | 5 | 0 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | .... | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | 7 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | 7 | 6 |

எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

**கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு**

ஆசிரியர் S. ஜகந்நாதன்
(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை)
J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M. Ed. திருத்தியமைத்தது

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | அணா | 5 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | ,, | 6 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | .... | ,, | 10 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | ,, | 13 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | ,, | 14 |

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# பாலர் கல்வி

| தொகுதி 19 | ஜய ஹூ ஐப்பசி மீ<br>1954 அக்டோபர் | பகுதி 7 |
|---|---|---|


## மௌன வாசிப்பு—1

V. நடராஜன்

**ஏன் அவசியம் :**—மொழிப் பயிற்சியில் முக்கியமானது மௌனமாக வாசித்துப் பொருள் சுவை அனுபவித்து மகிழ்வதே யாகும். இந்த நோக்கத்தை இதுகாறும் பள்ளிச்சாலைகளில் சீரான திட்டமிட்டு அநுசரிக்கவில்லை. சில வருஷங்களாகத் தான் இம்முயற்சியில் ஆசிரியர்கள் ஈடு பட்டிருக்கிறார்கள். ஆயினும் இன்னும் பல பள்ளிச்சாலைகளில் இந்த நோக்கத்தை சாதிப்பதற்கான முறைகளைக் கையாளுவ தில்லை.

கேட்போன் மெச்சும்படி உறக்க வாசிப்பது மொழிப் பயிற்சியில் ஒரு பகுதியேயாகும். இந்த ஒரு பகுதியை மாத்திரம் செவ்வனே நடத்தி வெற்றி பெற முயற்சி செய்கிறோம். திருத்தமாக ஒலிகளை உச்சரிக்கும்படி பயிற்சி தருகி றோம். சொற்களையும், வாக்கியங்களையும் உறக்கப் படிக்க அதிக நேரம் தருகி றோம். ஆனால் இது அடிப்படையான ஆரம்பநிலை என்பது விளங்கும். உறக்க வாசிக்கும் பழக்கம் அமைந்து ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டவுடன் மௌன வாசிப்புப் பயிற்சியைத் தொடங்கி வகுப்பு உயர உயர அதிகம் அதிகமான மௌன வாசிப்புத் திட்டம் அமைய வேண்டும்.

பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் வாழ்க் கையில் அமர்ந்த பிறகு இளைஞர் இளைஞி கள் உறக்க வாசிக்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு. ஏதோ சில சமயம் கடிதங்களை அல்லது அறிக்கைகளை உறக்க வாசிக்கலாம், கதா காலட்சேபங் களில் மூல கிரந்தங்களை உறக்கப் படிக்கலாம். குடும்பங்களில் மற்றவர் கேட்டு ரசித்து இன்புறும் வகையில் ஒரு வர் படித்துக் காட்டுவது வெகு அபூர்வம். பெரும்பான்மையோர் தாமே வாசித்து பொருள் அறிந்து இன்ப முறுவதே சகஜம். அறிவைப் பெருக்கிக்கொள்ள வும், பற்பல நவீன விஷயங்களைப் படிக்க வும் இலக்கியத்தில் ஆசைகொண்டு படித்து மகிழவும் மௌன வாசிப்பு அவசியமாகிறது. இவ்விதம் வாசிப் பதற்கு நாம் பள்ளியில் திட்டமிட்டு உதவவேண்டும். வாழ்க்கையில் மிகவும் அவசியமான இந்தப் பகுதியை பள்ளிச் சாலையில் புறக்கணிப்பதனால் மொழிப் பயிற்சித் திட்டம் பூர்த்தியாகாது.

**பாடத் திட்டம் :**—பாடத் திட்டம் என்னவோ வகுத்து அமைக்கப்பட் டுள்ளது. மௌன வாசிப்பின் அவசி யத்தை உணர்ந்து இந்தத் திட்டம் ஆரம் பத்திலிருந்தே தொடங்கி மேல் வகுப்புக் களில் பெருகவேண்டுமென்று வகுத் திருக்கிறார்கள்.

ஒவ்வொரு வகுப்பிலும் வாசிப்பு அள வில் மௌன வாசிப்புப் பகுதி எவ்வளவு இருக்கவேண்டும் என்ற திட்டப்பிரகாரம் முதல் வகுப்பில் நூற்றில் இருபது அதா வது ஐந்தில் ஒரு பகுதி மௌன வாசிப்பு வேண்டும். 2-ம் வகுப்பில் 100-க்கு 40, 3-ம் வகுப்பில் 100-க்கு 60, 4-ம் வகுப் பில் 100-க்கு 80, 5-ம் வகுப்பில் 100-க்கு 90 என்று ஸிலபஸ் அமைந்துள்ளது.

அதாவது 4, 5 வகுப்புக்களில் மௌன வாசிப்புப் பகுதி எவ்வளவு உயர்ந்துவிட் டது என்று கவனிக்கவேண்டும். 6, 7, 8 வகுப்புக்களில் வாசிப்பில் பெரும்பாகம்

லாம். வாசிப்பு நேரமும், நிமிஷத்திற்கான வேக அளவும், வாசிப்பு விஷயமும் ஆசிரியர்கள் திட்டமிடவேண்டும் என்பதே முக்கியம். மாதத்திற்கு மாதம் தேர்ச்சி விருத்தி காணவேண்டும் என்பதும் முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும். வேக அளவு, நேரம், சோதனை முதலிய அம்சங்களைக் கவனியாமல் மௌன வாசிப்புப் பயிற்சி மாத்திரம் சும்மா அளிப்பதில் ஒருவித பயனும் காணமுடியாது. அவ்வித வாசிப்பு திட்டமிட்ட பயிற்சி ஆகாது.

### சராசரி அளவு :

சிலகாலம் இவ்விதப் பயிற்சிகள் தந்து அனுபவம் கண்ட பிறகு அந்தந்த வகுப்புக்கான (அதாவது அந்தந்த வயது அளவுக்கான) சராசரி வாசிப்பு வேக அளவு எவ்வளவு என்று ஒருவாறு மதிப்பிட்டுக் கொள்ள முடியும். மேலே குறிப்பிட்ட சராசரி அளவு இப்போது மிகவும் குறைந்தபட்ச அளவாகவே இருக்கும். சில சோதனைகளில் 5-ம் வகுப்புப் பிள்ளைகளிடையே 25-ம் 50-ம் ஆக நிமிஷ வாசிப்பு அளவு காணப்பட்டது. ஆனால் வகுப்பு சராசரி அளவு திட்டமிடுவதற்கு இவ்வித இரண்டொரு சோதனைகள் போதா. நூறு சோதனைகளாவது நடத்திய பிறகு சராசரித் திட்டமிடலாம். ஆனால் அந்த அளவும் காலத்துக்குக் காலம் மாறுதல் அடையும்.

ஒரு சமயம் என் அனுபவத்தில் ஒரு பள்ளியில் மூன்றும் படிவத்தில் பயிலும் மாணவன் (12 வயது) 80 சொல் வேக அளவில் சுமார் 2500 சொற்கள் கொண்ட ஒரு கதையை (அரை மணி நேரத்தில்) படித்துவிட்டு, கதையின் சாராம்சங்களை விடாமல் திரும்பவும் சொன்னான். இதைக்கொண்டு 12 வயதுக்கு சராசரி வாசிப்பு வேகம் (average reading speed per minute) நிமிஷத்திற்கு 80 சொற்கள் என்று திட்டமிட முடியாது.

ஓரோர் பள்ளியிலும் சோதனைகள் நடத்திய பிறகு அந்தந்தப் பள்ளியில் சராசரி வாசிப்பு வேகம் ஒவ்வொரு வகுப்பிலும் இவ்வளவு என்று நிர்ணயிக்கலாம். பிறகு அந்த வட்டாரத்தில் உள்ள மற்றப் பள்ளிகளில் உள்ள சராசரி திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, இன்னும் முன்னேற்றமான தேர்ச்சி செய்ய வேண்டுமாயின் பயிற்சியை அதிகப்படுத்த வேண்டுமென்பது விளங்கும்.

### கருத்து உணர்வது :

மௌன வாசிப்புப் பயிற்சியில் கருத்து உணர்வது மிகவும் அவசியமான பயிற்சி. ஆயினும் விரைவாகப் படிப்பதும் இதில் கூடியுள்ளது. குறிப்பிட்ட கால அளவில் படித்து முடிக்கவும் வேண்டும், கருத்தையும் கிரகிக்கவேண்டும். கருத்து கிரகிப்பது மாத்திரம் போதும் என்று கொள்ளக்கூடாது, வேகமும் அவசியம்.

கருத்து கிரகித்தலைச் சோதிக்கும்போது முக்கியமாகப் பொதுக் கருத்தை அறிந்துகொண்டானா என்று அறியவே சோதனை வினாக்கள் தரவேண்டும். சில்லறை விஷயங்களை ஒதுக்கி, விஷயத்தில் சாராம்சங்களை மாத்திரம் அறிந்துகொள்வதே திறமை. அனாவசியமான நுணுக்க அம்சங்களைப்பற்றி வினாக்கள் தரக்கூடாது.

சோதனைச் செய்வதும், சோதனை முடிவு அறிவதும் (வாசிப்பு நேரமும்) எல்லா அலுவல்களும் ஒரு பீரியட் நேரத்திலேயே முடித்துவிடும்படி திட்டமிட வேண்டும். விடைகளைப் பரிசீலித்துப் பிறகு சாவகாசமாக முடிவு சொல்லாமல் அந்தந்த பீரியட் நேரத்திற்குள் மதிப்பீடு செய்வது அவசியம். இவ்விதம் செய்வதால் ஆசிரியருக்கும் சிரமம் ஏற்படாது. வியாச (composition) நோட்டுப் புத்தகங்களையும் பரீட்சை விடைத்தாள்களையும் கட்டுக் கட்டாகச் சுமத்திக்கொண்டு அவதிப்படுவது ஒருபுறம் இருக்க, இவ்வித கிரகித்தல் சோதனை விடைகளை மதிப்பிடும் இன்னொரு வேலையையும் கூடச் சேர்த்துச் சுமையை அதிகமாக்கிக் கொள்ளக்கூடாது. அதிக வேலையைச் சுமத்திக்கொள்வதால் அலுப்பும் வெறுப்பும் உண்டாகும். இவ்வித மனோபாவம் நம்மை ஆட்கொண்டுவிடாமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அலுப்பும் வெறுப்பும் ஏற்பட்டால் இவ்வித சோதனை

(104-ஆம் பக்கம் பார்க்க.)

# கணக்கு : கற்பித்தல்


## 10 முதல் 100 வரையிலுள்ள எண்கள்

T. S. ராஜகோபாலன், B.A., L.T.,
இந்து உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி

குறிப்பு : சென்ற இரண்டு இதழ்களில் வெளியிடப்பெற்றவை "100 ஆதாரக் கூட்டல்களும்," அவற்றைப் பின்பற்றிய "100 ஆதாரக் கழித்தல்களும்," ஆகும். துறைத்தனத்தார் வகுத்துள்ள திட்டப் படி, மொத்தம் 10 வரையில் வரும் கூட்டல்களும், இவற்றைப் பற்றிய கழித்தல் களுமே முதல் வகுப்பில் போதிக்க வேண்டுவனவாகும். ஆயினும் முந்திய இரண்டு இதழ்களில் பொதுவாக இக்கூட்டல்களும், கழித்தல்களும் கற்பிக்க வேண்டிய முறைகள் விவரிக்கப்பெற்றன.

### நூறு - படம்

சிறுர்கள் 10 - வரையில் எண்ணவும் எழுதவும் கற்றபின்பு, 10, 10-ஆக 20, 30, 40,... என்று 100-வரையில கற்க வேண்டும். இவ்வாறு கற்பிப்பதற்குப் பின்வரும் படம் மிகப் பயன்படும்.



முதலில் 10, 20, 30,... இவைகளை எண்ணவும், பின்பு இவற்றை எழுதவும் குழந்தைகள் தெரிந்துகொள்ளவேண்டும். கற்பிப்பவர் முதல் வரிசையிலுள்ள பொட்டுக்களை எண்ணச்செய்து, அதில் "பத்துப் பொட்டுக்கள் என்று சொல்ல வேண்டும் ; பின்பு இரண்டாம் வரிசையையும் எண்ணச் செய்யவேண்டும். "முதல் இரண்டு வரிசைகளில் "இரண்டு பத்து" உள்ளன ; இரண்டு பத்து என்பதை இருபது என்கிறோம்," என்று குழந்தைகளுக்குச் சொல்லவேண்டும். இவ்வாறே பாலர்கள்

மூன்று பத்து — முப்பது,
நான்கு பத்து — நாற்பது,
... ... ...
எட்டு பத்து — எண்பது,
ஒன்பது பத்து — தொண்ணூறு,
பத்து பத்து — நூறு

என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

பின்னர் 20, 30, 40,... இவற்றை இலக்கங்களாக எழுதும் முறையைப் பின்வருமாறு காட்டவேண்டும்.

ஒரு பத்து — 10 (பத்து)
இரண்டு பத்து — 20 (இருபது)
மூன்று பத்து — 30 (முப்பது)
... ... ...
எட்டு பத்து — 80 (எண்பது)
ஒன்பது பத்து — 90 (தொண்ணூறு)
பத்து பத்து —100 (நூறு).

### சோதனை

1. (நூறு-படத்தைக் காட்டி) - 2, 5, 7, 9, 10, 3, 4—வரிசைகளை ஒவ்வொன்றாகக் காட்டி, மொத்தம் எத்தனை பொட்டுக்கள் உள்ளன என்று செல்லச் செய்வது.

2. 30, 50, 90, 80, 20, 70, 100— இந்த எண்களைப் படிக்கச் செய்வது.

3. 30, 40, 50; அடுத்த எண் ...

4. கைகளிலும் கால்களிலும் எத்தனை விரல்கள் என்று எண்ணச் செய்வது.

5. குழந்தைகளை வரிசைக்குப் பத்துப் பேர்களாக 3 வரிசைகளில் நிறுத்தி மொத்தம் எத்தனை என்று சொல்லச் செய்வது.

6. முன்போல, 10, 20, 30,...என்ற இலக்கங்கள் கொண்ட அட்டைத் துண்டுகளையும், பத்து, இருபது, முப்பது,... என்ற சொற்கள் கொண்ட அட்டைத் துண்டுகளையும் (flash cards) சரியாக இணைக்கச் செய்வது.

7. 30, 40, 90, 60, 70—இவற்றை இலக்கங்களாகப் பலகையில் எழுதச் செய்வது.

### 11-முதல் 20-வரையில் எண்களைக் கற்பித்தல்

கற்பிப்பதற்காக வேண்டிய உபகரணங்கள்: 10 ரப்பர் துண்டுகள் அல்லது நன்கு செதுக்கப்பட்ட சல்லிகள் அல்லது விரைகள் கொண்ட காலி நெருப்புப் பெட்டி, தனியாக 10 ரப்பர் துண்டுகள் அல்லது சல்லிகள் அல்லது விரைகள்.

கற்பிப்பவர் பெட்டியிலுள்ள துண்டங்களை எண்ணச் செய்து 10 ரப்பர் துண்டங்கள் உள்ளன என்று சொல்ல வெண்டும். அந்தப் பெட்டிக்குப் பக்கத்தில் ஒரு ரப்பர் துண்டை வைத்து, மொத்தம் **பத்தும் ஒன்றும்**, அதாவது **பதினொன்று** என்று சொல்லவேண்டும்.

**பத்தும் ஒன்றும் பதினொன்று**

என்று கரும்பலகையில் எழுதவேண்டும். பின்னர் கரும்பலகையில் பின்வருமாறு பொட்டுக்கள் அமைத்து, பொட்டுக்களின் எண்ணிக்கை பதினொன்று என்று சொல்லச் செய்யவேண்டும்.

○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○
○

பின்பு இரண்டு குழந்தைகளைச் சேர்த்து, இருவரும் சேர்ந்து பதினொன்று விரல்கள் காட்டச் செய்யலாம். இதிலிருந்து குழந்தைகள் தெரிந்து கொள்ளவேண்டுவது, பதினொன்று என்பது பத்தைவிட ஒன்று அதிகம் என்பதாம்.

பின்பு பெட்டியின் பக்கத்தில் 2 துண்டங்களை வைத்து மொத்தம் 12 துண்டங்கள் என்று கற்பிக்க வேண்டும். முன்பு போல் 11 வைத்து, 1 சேர்த்து மொத்தம் 12 என்றும் சொல்லவேண்டும். ஆக $12 = 10 + 2$, $12 = 11 + 1$ என்பனவற்றைச் சிறுர்கள் நன்கு கற்க வேண்டும்.

இவ்வாறு இருபது வரையில் சொல்லக் கற்றபின் பாலர்கள் 11 முதல் 19 முடிய எப்படி இலக்கங்களாக எழுதவேண்டுமென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

**பயிற்சி**

(A. வாயால் செய்வது)

1. ஒரு வரிசையில் உட்கார்ந்துள்ள குழந்தைகளை எண்ணுவது.

2. கடிகாரம் மணி அடிப்பதை எண்ணுவது.

3. கயிறு ஆடும்போது சரியாகத் தாண்டுவதை எண்ணுவது.

4. காலண்டரில் 20-வரையில் தேதிகளைப் படிப்பது.

(B. எழுதுவது)

1. பதின்மூன்று, பதினெட்டு, பத்தொன்பது—இவற்றை இலக்கங்களாக எழுதுவது.

2. 13, 14, 15, அடுத்த எண்......

3. 18, 17, 16, அடுத்த சிறிய எண்...

### 21 முதல் 30 வரையில் எண்களைக் கற்பித்தல்.

உபகரணங்கள்: முன் பகுதியில் போல் 10-ரப்பர் துண்டங்கள் கொண்ட நெருப்புப் பெட்டிகள் இரண்டும், தனியான 10 துண்டங்களும்.

கற்பிப்பவர் ஒவ்வொரு பெட்டியிலுமுள்ள துண்டங்களை எண்ணச் செய்தால், சிறுவர்கள் ஒவ்வொரு பெட்டியிலும் 10

இருப்பதைத் தெரிந்துகொள்வார்கள். மொத்தமாக உள்ளவை இரண்டு பத்து, அதாவது இருபது. இந்த இரண்டு பெட்டிகளை அடுத்து ஒரு துண்டை வைத்தால், மொத்தம் இருபதும் ஒன்றும் ஆகும். இதை இருபத்தோன்று என்று சொல்லவேண்டும்.

இருபதும் ஒன்றும் இருபத்தோன்று.

பின்னர், முன் பகுதியில்போல் $20+2=22$, $21+1=22$ என்ற இரண்டையும் கற்பித்து, இவ்வாறு 30 வரையில் போதிக்கவேண்டும். இந்த எண்களை இலக்கங்களாக எழுதுவதும் காட்டப்படவேண்டும்.

பயிற்சிகள் - முன்போல்.

பின்பு 31-லிருந்து 40 வரையிலும், 41-லிருந்து 50 வரையிலும் இதே மாதிரி கற்பித்தல், மீதியுள்ள எண்களை எழுதுவதும் படிப்பதும் எளிதாகும்.

சிறுர்கள் 100 வரையில் எண்ணவும் எழுதவும் கற்றுக்கொள்ளும்போதே, அவர்களது ஆற்றலை அவ்வப்போது சோதனை செய்வது அவசியமாகும். இவ்வாறு சோதனையின் வகைகள் சில கீழே கொடுக்கப்பெற்றுள்ளன.

A. நூறு படம். இந்தப் படத்தில் பின்வரும் எண்களை ஒவ்வொன்றுகக் காட்டச் செய்வது :

(i) 50, 70, 30, 20, 90, 60.

(ii) 52, 71, 33, 47, 61, 93.

(iii) 100-லிருந்து 1 வரையில் தலைகீழாகப் படித்தல்.

B. எண்களைப் படித்தல் : மேல் பகுதியில் பிள்ளைகள் எண்களைக் காட்டும்போது, தனியாகவும் சேர்ந்தும் எண்களை வாயால் சொல்லும்படி பழக்கவேண்டும்.

C. வாயால் சோல்ல.

(1) 43-க்கு அடுத்த எண்......

(2) 62-க்கு அடுத்த எண்......

(3) 79-க்கு அடுத்த எண்......

(4) 89-க்கு அடுத்த எண்......

(5) 47-லிருந்து 53 வரையில் சொல்லு.

(6) 33-லிருந்து 28 வரையில் சொல்லு.

(7) 25-ஐ விட 1 பெரிய எண்......

(8) 43-ஐ விட 1 பெரிய எண்......

(9) 38-ஐ விட 1 சிறிய எண்......

(10) 43 என்றல் ...... பத்தும் ...... ஒன்றும்.

(11) 7 பத்தும் 4 ஒன்றும் எந்த எண் ?

D. எழுதுவதில் பயிற்சி :

(1) 37 முதல் 42 வரையில் எழுது.

(2) 3 பத்தும் 5 ஒன்றும். இந்த எண்ணை எழுது.

(3) 4 பத்தும் 3-ம். இந்த எண்ணை எழுது.

(4) 40-க்கு முந்திய எண்ணை எழுது.

(5) 50-க்கு அடுத்த எண்ணை எழுது.

பாலர்கள் 100 வரையில் எண்ணவும் எழுதவும் நன்கு கற்றவுடன் பின்வரும் பயிற்சிகள் பயன்பெறும் :

A. (1) பின்வரும் வரிசைகள் ஒவ்வொன்றிலும் இரண்டு எண்கள் உள்ளன. இவற்றுள் பெரிய எண்ணை அடையாளம் செய் :

(i) 43, 54

(ii) 73, 81

(2) பின்வரும் எண்களுள் மிகப் பெரிய எண்ணின்மேல் √ அடையாளத்தை இடு : 75, 33, 81.

B. பின்வரும் எண் வரிசைகளில் காலி இடங்களைப் பூர்த்தி செய் :

(1) 38, 39, 40, ..., ..., ..., 44.

(2) 73, 72, 71, 70, ..., ..., ..., 66.

C. (1) 45 எனில் ... பத்தும் ... ஒன்றும்.

(2) 8 பத்தும் 7-ம் என்ற எண் ...

(3) 9 பத்து என்ற எண் ...

(4) 31-லிருந்து 2, 2-ஆக 41 வரையில் சொல்லு.

(5) 10-லிருந்து 5, 5-ஆக 40 வரையில் சொல்லு.

(6) 20-லிருந்து 10, 10-ஆக 100 வரையில் சொல்லு.

(7) 18, 19, 20, ... என்ற வரிசையில் இரண்டாவது எண் ..., மூன்றாவது எண் ..., நாலாவது எண் ...

(8) 28, 29, 30, ... என்ற வரிசையில் ஐந்தாவது எண் ...

(9) 83-லிருந்து 75 வரையில் தலைகீழாக எழுது.

---

# செய்தித் திரட்டு

**(1) ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், தர்மபுரி தாலூகா.**

27-6-54ல் குமாரசாமிபட்டி ஆரம்ப பாடசாலை செங்குந்தர் நிலையத்தில் உயர்திரு M. கந்தசாமி கவுண்டர், M. L. A. அவர்கள் தலைமையில் ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாடு காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையிலும், மாலை 2-15 மணி முதல் 5 மணி வரையில் உயர்திரு T. நரசிம்ம கவுண்டர், யூனியன் தலைவர் அவர்கள் தலைமையிலும் நடந்தது.

தர்மபுரி வட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் உயர்திரு R. மாணிக்கம் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றுவித்து சொற்பொழிவு ஆற்றினர்.

யூனியன் தலைவர் உயர்திரு T. நரசிம்ம கவுண்டர் அவர்கள் எல்லோரையும் வரவேற்றார்.

பாலக்கோடு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் உயர்திரு M. A. நடராசன், B.A., B.T. அவர்கள் மகாநாட்டை துவக்கி வைத்து அரிய சொற்பொழிவாற்றினர்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் பேராசிரியர் உயர்திரு. க. அன்பழகன், M.A. அவர்கள் "ஆசிரியர்களும் ஆரம்பக் கல்வியும்" என்னும் பொருள்பற்றி விரிவாகச் சொற்பொழிவாற்றினர்.

**பிற்பகல் நடவடிக்கைகள்**

உயர்திரு T. நரசிம்ம கவுண்டர் தலைமை தாங்கினர்.

யூனியன் செயலாளர் உயர்திரு G. K. சிங்காரவேலு நாயுடு அவர்கள் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

பாகல்பட்டி ஆசிரியர் உயர்திரு M. M. ரத்தினவேலு செட்டியார் அவர்கள் மனத்திற்கு இன்பம் ஊட்டத்தக்க சிறந்த முறையில் 'விகடக் கலா நிகழ்ச்சி' நடத்திக் காண்பித்தார்.

யூனியன் வரவு, செலவு அங்கீகரிக்கப்பட்டு, நிர்வாகக் கமிட்டி தேர்தலும் நடத்தப்பட்டது. பின்பு 40 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**(2) திருச்சி மாவட்ட ஹரிஜன நலப் பள்ளி ஆசிரியர்களின் முதலாவது மகாநாடு.**

இம்முதலாவது மகாநாடு திருச்சி, சிந்தாமணி E. R. ஹைஸ்கூல் கட்டிடத்தில் 14-8-54 காலை 9 மணிக்கு உயர்திரு. K. M. வல்லத்தரசு, B.A., B.L., M. P. அவர்களது சீரிய தலைமையில் இறை வணக்கத்திற்குப் பின் கொண்டாடப்பட்டது. நூற்றுக்கணக்கானவர்கள் குழுமியிருந்தனர். மகாநாடு துவங்கு முன் புகைப்படம் எடுக்கப்பட்டது.

தேசியக்கொடி யேற்றுவித்த திருச்சி மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் உயர்திரு. S. லாஸர் உடையார், B. SC., B.L. அவர்கள் "நம் தாய் நாட்டின் கொடி சின்னத்தில் அடங்கியுள்ள அத்தனை அம்சங்களும் பொருந்திய சிறந்த பண்புள்ளவர்கள் ஆசிரியப் பணியை மேற்கொண்டவர்கள். இவர்களது சுபீட்சம் நாட்டின் சுபீட்சம் என்ற நம்பிக்கையுடன் தேசியக் கொடியை ஏற்றுவிக்கிறேன்" எனக்கூறி ஏற்றுவித்தார்கள்.

மகாநாட்டின் திறப்பாளர் திருச்சி மாவட்ட நல அதிகாரி (Dt. Welfare

Officer, Trichy) உயர்திரு. G. ஸ்டீபண், M. A. அவர்கள் "இம்மகத்தான மகாநாட்டில் எல்லா ஆசிரியர்களையும் பிரமுகர்களையும் பார்க்க வாய்ப்பு கிடைத்தது பற்றி அகமகிழ்வதுடன் இம்மகாநாட்டைத் திறந்து வைப்பதில் பெரிதும் மகிழ்ச்சி. சகல நற்குணங்களுக்கும் பண்புகளுக்கும் முன்னோடியாகவுள்ள ஆசிரியர்கள் இம்மகாநாட்டில் பூரண பலன்களைப் பெற்று சுபீட்சம் அடைய நான் பெரிதும் ஆசிக்கிறேன். கூடுமான சகல அனுகூலங்களையும் ஆசிரியர்களுக்கு அளிக்க மனமுடனிருக்கிறேன்" எனக் கூறி மகாநாட்டைத் திறந்து வைத்தார்கள்.

மகாநாட்டின் தலைவர் உயர்திரு. K. M. வல்லத்தரசு, B.A., B.L., M.P. அவர்கள் தமது முன்னுரையில் "இன்றுள்ள சூழ்நிலையில் ஆசிரியர்கள் உள்ள பிற்போக்கு நிலையில் இவ்விதமான மகாநாடுகள் பல நடைபெற வேண்டுவது அவசியத்திலும் அவசியம். இம்மகாநாட்டின் மூலம் ஆசிரியர்கள் எதிர்பார்க்கும் பலன்களை அரசியலார் கவனித்து ஆவன செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாட்டின் ஆச்சாணி ஆசிரியர்கள் தான். ஆசிரியர்களின் குறைகளைக் களைய போதுமான வாய்ப்பாக, அதிர்ஷ்டவசமாக இம்மகாநாட்டை ஆசிரியர்களின் அதிகாரியாகவுள்ள திருச்சி மாவட்ட நல அதிகாரி அவர்களே திறந்து வைத்தது மட்டுமின்றி, மகாநாட்டில் வீற்றிருந்து ஆசிரியர்களின் குறைகள் எவை என கவனித்துக்கொண்டு இருப்பது, ஆசிரியர்களுக்கு எதிர்காலம் சுபீட்சம் உடையதாயிருக்கும் என்பதற்கு ஓர் சிறந்த அடையாளமாகும்" என்று குறிப்பிட்டார்கள்.

திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி (St. Joseph's College, Trichy) பேராசிரியர் உயர்திரு. V. M. சம்மனசு, M.A. அவர்கள் "எதிர்காலமும் ஆசிரியர்களும்" என்பதுபற்றியும், உயர்திரு. D. T. ராஜன் அவர்கள் "சமுதாயமும் ஆசிரியர்களும்" என்பதுபற்றியும் பேசினார்கள். யூனியன் கமிட்டி மெம்பர்களால் 13-8-54ல் கமிட்டிக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இருபத்தேழு தீர்மானங்களும் வாசிக்கப்பட்டு, மகாநாட்டில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

முடிவுரையாக தலைவர் அவர்கள் "ஆசிரியர்களின் நிலைமையும் சங்கத்தின் அவசியமும்" என்ற பொருள் பற்றிப் பேசினார். இறுதியாக பொதுக்காரியதரிசி அவர்களால், தலைவர் அவர்களுக்கும், மகாநாட்டில் கலந்துகொண்ட அதிகாரிகளுக்கும், கட்டிட உரிமையாளர்க்கும் நன்கொடையாளர்களுக்கும், ஆக்கவேலை புரிந்து உதவியவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பொதுமக்களுக்கும் முறைப்படி நன்றி நவிலப்பட்டது. நாட்டு வாழ்த்துடன் மாலை 6 மணிக்கு மகாநாடு இனிது முடிவுற்றது.

## (3) நடராஜபுரம்

2-10-54ல் இவ்வூர் இராம ; இராமசாமி செட்டியார் உயர்தர ஆரம்பப் பள்ளியில் காந்தி ஜெயந்தி கொண்டாடப்பட்டது. அவ்வமயம் புதுவயல் ஆசிரியர் திரு. S. நாகராஜ அய்யர் தலைமை வகித்தார்கள். முதலில் பள்ளி மாணவிகளால் இறை வணக்கம் பாடப்பட்டது. பின் தலைவர் தமது உரையில் காந்தியின் இளமைப் பருவத்தைப் பற்றியும், அவரின் இலட்சியங்களைப் பற்றியும் எடுத்துரைத்தார். பின்பு தலைமை ஆசிரியர் உயர்திரு. S. முத்துவீரப்பா "கடவுள் பக்தியும், காந்தியும்" என்னும் தலைப்பில் அழகாக எடுத்துரைத்தார். பின்பற்றி ஆசிரியர்கள் திரு. C. நாகராஜன், திரு. A. சபேசன் ஆகியோர் காந்தியடிகளின் நற்பண்புகளைப் பற்றிப் பேசினார்கள். இடையிடையே மாணவ, மாணவிகள் காந்தியின் வாழ்க்கையைப் பற்றிய பாட்டுக்களைப் பாடினார்கள். பிறகு மாணவிகளால் கும்மி, கோலாட்டம் முதலிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கடைசியாக நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவடைந்தது.

## (4) ஸௌராஷ்ட்ர செகண்டரி பாடசாலை, மதுரை

6-10-54ல் இப்பள்ளியில் கலைமகள் விழா மிகச் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. ஷை விழாவில் நகரப் பிரமுகர்களும் பள்ளி நிர்வாகக் குழுவினர் பல

ரும், பள்ளிக் கௌரவ காரியதரிசி ஸ்ரீ K. R. V. சீதாராம், B.A., B.L., அவர்களும் கலந்து கொண்டனர். மதுரை அறநிலையப் பாதுகாப்பு அதிகாரி திரு. K. சோமசுந்தர தேசிகர் அவர்களும், இராமநாதபுரம் ஜில்லா அறநிலையப் பாதுகாப்பு அதிகாரி அவர்களும் ஷை விழாவிற்கு விஜயம் செய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

ஷை விழாவில் பள்ளி மாணவர்கள் கேட்போரனைவரும் பாராட்டும் வண்ணம் பக்திப் பாடல்கள் பலவற்றைப் பாடினர்.

பின்பு மங்கள கீதத்துடன் விழா இனிது முடிவுற்றது.

(5) ஹிந்து உதவி ஆரம்ப பாடசாலை, அரியூர்.

6-10-54 புதன்கிழமையன்று சரஸ்வதி பூஜையும், பெற்றோர் சங்கமும் பள்ளியில் நடைபெற்றது. பிற்பகல் 3 மணிக்கு எல்லா மாணவ, மாணவிகளும் பூஜைக்கு வந்திருந்தனர். பூஜை விமரிசையாய் நடைபெற்றது. பூஜைக்குபின் பொரி, கடலை, சந்தனம், தாம்பூலம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

பெற்றோர் கூட்டத்திற்கு திரு. S. முத்துசாமி ஐயர் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் ஸ்ரீ A. S. இராமநாதய்யர் கல்வியின் மேன்மையைப்பற்றியும், சரஸ்வதி பூஜையின் முக்யத்தையும் விளக்கித் தெளிவாகப் பேசினர். தலைவர் குழந்தைகள் தவறாமல் பள்ளிக்கு வரவேண்டும் என்றும், அவ்விதம் வரும்படி பெற்றோர்கள் செய்யவேண்டும் என்றும், கல்விதான் வருங்காலத்தில் முக்கியமென்றும், அதற்காக இளமையிலேயே வீணாகாமல் கல்வியை கற்க வேண்டும் என்றும் கூறினார். உதவி ஆசிரியரின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

(6) சொக்கலிங்க வித்தியாசாலை, லெட்சுமிபுரம்

8 10-54ல் இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலையில் மகாத்மா காந்தி பிறந்த தின விழா வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. G. சுவாமிநாத ஐயரவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப்பின் மகாத்மா காந்தியடிகளின் பள்ளி வாழ்க்கையைபற்றி விரிவாக எடுத்துரைக்கப்பெற்றது. சொ. வி. மாணவ மாணவிகளின் பாட்டு, நடிப்பு, கும்மி, கோலாட்டங்கள் நடைபெற்றன.

தலைவர் முடிவுரைக்குப்பின் மாணவ மாணவிகளுக்குத் தின்பண்டம் நல்கி நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

8-10-54ல் சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் விதேஹ முக்தி யடைந்தமை குறித்தும், புத்தேரி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இயற்கை எய்தியமை குறித்தும் இரங்கற் கூட்டம் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. G. சுவாமிநாதய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப்பின் ஸ்ரீ சங்கராச்சாரியார் இந்து மதத்திற்குச் செய்துள்ள சேவை குறித்தும் கவிமணியவர்கள் தமிழுக்கும், தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கும் செய்துள்ள தொண்டுபற்றியும் தலைவர் அவர்களால் எடுத்துரைக்கப் பெற்றது. ஜகத்குரு அவர்களுக்கு அஞ்சலியும் கவிமணியவர்களின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்தனையும் நடைபெற்றது.

---

(98-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகளில் உற்சாகம் இராது. உற்சாகம் இராவிடில் பலன் அபிவிருத்தி உண்டாகாது. ஆகவே அந்தந்த பீரியட் நேரத்திலேயே முடித்துவிடும்படியான திட்டத்தை அனுசரிப்பது முக்கியம்.

இவ்விதம் திட்டமிட முடியுமா என்று சந்தேகிக்க வேண்டியதில்லை. சோதனை மதிப்பீடு வழிகளைச் சுலபமாக்குவது எங்ஙனம், மௌன வாசிப்புப் பகுதிகள் திட்டமிட்டுச் சோதனை செய்வது எங்ஙனம் என்றும் அடுத்த இதழில் விளக்குவோம்.

# பத்திராதிபர் குறிப்பு

## கல்வி முன்னேற்றமா, வேலை இல்லாதவர்களுக்குச் சலுகையா?

நமது இராஜ்யத்தில் இந்த ஆண்டில் சுமார் 1500, ஓர் ஆசிரியர் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த திட்டமிட்டிருப்பதாக அறிகிறோம். இந்தப் பள்ளிக்கூடங்களில் S. S L. C., Intermediate, B. A. பரிக்ஷைகளில் தேர்ச்சி பெற்று, வேலை கிடைக்காமலிருப்பவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்களாம். S. S. L. C. தேர்வு பெற்றவர்களுக்கு ரூ 45 மாத சம்பளமும் பஞ்சப்படி ரூ 24ம் கொடுக்கப்படும் என்றும்; B. A. பட்டம் பெற்றவர்களுக்கு ரூ 60ம் பஞ்சப்படி ரூ 24ம் கொடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. 1000 ஜனத்தொகைக்குக் குறைவாயுள்ள கிராமங்களில் இப்புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படும் என்றும், அவை, ஜில்லா போர்டு நிர்வாகத்துக்குட்பட்டிருக்கும் என்றும் அறிகின்றோம். இப்பள்ளிக்கூடங்களில் சேரும் மாணவர்கள் 6 முதல் 11 வயதுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்களின் தேர்ச்சி வித்தியாசப்பட்டிருப்பதினால் அவர்களை குறைந்த பக்ஷம் 3-4 பிரிவுகளாகத்தான் பிரிக்க வேண்டியிருக்கும். எனினும் இந்த ஓராசிரியர்தான் அவர்களின் கல்வியைக் கவனிக்க வேண்டியிருக்கும். படித்துத் தேர்ச்சிபெற்று, வேலை கிடைக்காமல் அவஸ்தைப்படுபவர்களுக்கு ஒரு வேலை கொடுத்து அதன் மூலம், கல்வி முன்னேற்றத்தை அடைவது என்றால் அது நல்ல திட்டமே. ஆனால் ஓராசிரியர் பள்ளிகள் தரமுள்ளதாக இருக்குமா என்ற விஷயத்தைக் கவனித்தல் அவசியம்.

நமது இராஜ்யத்தில், ஓராசிரியர் பள்ளிக்கூடங்களே வியர்த்தத்துக்கு (Wastage) முக்கியகாரணம் என்றும், அவைகளை ஒன்று 5 ஆசிரியர் பள்ளிக்கூடங்களாக மாற்ற வேண்டும் அல்லது அவைகளை மூடிவிடவேண்டும் என்ற கொள்கைப்படி சென்ற 16 வருஷங்களாக கல்வி இலாகா நடவடிக்கை எடுத்து வருகின்றது. சுமார் 11000 பள்ளிக்கூடங்களிலிருந்து அவைகளின் எண்ணிக்கையை 4000க்கு குறைத்து வந்துள்ளார்கள். ஆனால் இப்பொழுது 1500 ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவது வியர்த்தத்தை அதிகப்படுத்தாதா?

நமது இராஜ்யத்தில் 100க்கு 90 பேர், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள். பயிற்சி பெற்ற Higher grade ஆசிரியர்கள், S. S. L. C யில் குறிப்பிட்ட தேர்வில்லாத செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இவர்கள் இந்த வேலையில்லாத் திண்டாட்ட ஒழிப்புத் திட்டத்தின்படி நலன்பெற முடியாதாம். ஒரு தொழிலுக்கு என்று யோக்கியதாம்சம் பெற்றவர்கள் இந்தத் திட்டத்தினின்று விலக்கப்பட்டுள்ளார்கள் என்பது விந்தையிலும் விந்தை!

தவிர, இப்பொழுதுள்ள விதிகள்படி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருவர் இருந்தால் பயிற்சி பெறாத ஒருவரை நியமிக்கலாம் என்ற சலுகையிருக்கிறது. ஆனால் இப்புதிய திட்டத்தின்படி, புதிதாக ஆரம்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களில் பயிற்சி பெறாதவரே ஆசிரியராக நியமிக்கப்படுவர். பயிற்சி பெறாதவர் பயிற்சி பெற்றவரைக் காட்டிலும் திறன் கொண்டவராயிருப்பர் என்பது கருத்தா? அல்லது, ஆசிரியர் தொழிலுக்கு தனிப்பட்ட யோக்கியாதாம்சம் வேண்டியதில்லை, பொதுப் பரிக்ஷையில் தேர்வு பெற்றும், வேலை கிடைக்காமல் இருக்கும் ஒரு யோக்யதை போதும் என்று மத்ய அரசாங்கம் கருதுகிறதா? அப்படி இருந்தால் நமது அரசாங்கம், அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்கிறதா என்பதை அறிய ஆவலாக இருக்கின்றோம்.

இப்பொழுது ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்திலிருக்கும் 5 வகுப்புள்ள பள்ளிக்கூடங்களில், ஆசிரியர் பற்றாக்குறை இருக்கின்றதென்று, புள்ளி விவரங்கள் சென்ற ஆண்டில் வெளியிடப்பட்டன. ராஜாஜி கொண்டுவந்த திட்டத்தின் ஒரு நற்பயன், ஒரு ஆசிரியர் இரண்டு, மூன்று

வகுப்புக்களை ஒரே சமயத்தில் கவனிப்பது ஒழிந்து, ஒரு வகுப்புக்கு ஓராசிரியர் ஏற்படும் என்று கூறப்பட்டது. ஆனால் இப்புதிய திட்டத்தின்படி பல வகுப்புகளுக்கு ஓராசிரியர், அதுவும் ஆசிரியர் தொழிலுக்கு பயிற்சி பெற்றவரும் அல்ல. அத்தொழிலை விரும்புபவரும் இல்லை. அதனால் கல்வி முன்னேற்றமடையுமா? மாணவர்களிடத்தில் தேர்ச்சியுண்டாகுமா?

இந்த பிரச்னைகளை இந்திய அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டி, இத்திட்டத்தை பயனளிக்கும் முறையில் மாற்றியமைத்துக்கொள்ள நமது இராஜ்ய சர்க்கார் முயற்சிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். தவறினால் பணச்செலவு வியர்த்தமாவதோடு, கல்வி முன்னேற்றமும் தடைப்படும்.

## ஆரம்பக்கல்விக் கமிட்டி

ஆரம்பக்கல்வி விஷயங்களை பரிசீலனை செய்து, தகுந்த சிபார்சு செய்ய ஒரு கமிட்டி, நமது இராஜ்ய அரசாங்கம் நியமித்துள்ளது. என்ன விஷயங்களைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று அறிக்கை வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் பத்திரிகை நிருபர்களிடம் கனம் கல்வி மந்திரி பேசும்பொழுது ஆரம்பக் கல்வியைப்பற்றிய எல்லா விஷயங்களையும் இந்தக் கமிட்டி பரிசீலனை செய்யும் என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. கல்விப் பிரச்னை பாடதிட்டப் பிரச்னை மாத்திரமில்லை. ஆதாரக் கல்வித் திட்டமே, அரசாங்கத்தின் இலக்கு என்று அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார்கள். இதை எவ்வாறு அமுலுக்குக் கொண்டுவருவது என்பதும் பள்ளிக்கூடங்களில் சேராமலிருக்கும் பள்ளி வயதுள்ள சிறுவர்களை எவ்வாறு பள்ளிக்கூடங்களுக்கு வரும்படி செய்வது என்பதும், ஆரம்பக் கல்வியை இலவசமாக்குவது எப்படி என்பதும் முக்கியப் பிரச்னைகள். இவைகளைத் தீர்த்தால்தான், நமது அரசியல் சட்டத்தின் ஒரு முக்கிய லக்ஷியம் கைகூடும். இச்சமயத்தில் எந்த அளவுக்கு உதவி பெறும் ஸ்தாபனங்களை பயன்படுத்தலாம் என்பதை நன்கு ஆலோசிக்க வேண்டும். கட்டாயக் கல்வித் திட்டத்திற்கும், உதவி பெறும் திட்டத்திற்கும் உள்ள முரண்களைச் சீர்ப்படுத்துவது அவசியமாகும். எனவே, இக்கமிட்டிக்குக் கொடுத்துள்ள வேலை மிகக் கடினமான வேலை. இதைச் செய்ய, ஆத்திரமற்ற மனப்பான்மையும், தீர்க்க ஆலோசனையும், சேவா நோக்கமும் திறமையும் அவசியமாகும். இக்குணங்கள் அனைத்தும் பொருந்தியுள்ள அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தது நமது பாக்கியமாகும். மேலும் அறிவில் சிறந்தவரும், செய்யமுடியாது என்பதை எளிதில் செய்து முடிப்பவரும், கல்வித் தொண்டே தனது வாழ்க்கை லக்ஷியம் என்று கொண்டவருமான டாக்டர் அழகப்ப செட்டியார் இந்தக் கமிட்டிக்குத் தலைவராக இருக்க இசைந்துள்ளது நமது நாட்டின் பெரும்பாக்கியமாகும். இனி ஆரம்பக் கல்வி முன்னேற்றமடையும் என்றும், நமது குழந்தைகளுக்கு நல்ல பயன்தரக்கூடிய கல்வித்திட்டம் அமையும் என்றும், ஆசிரியர்கள் தங்கள் தொண்டை மன நிம்மதியுடனும், சந்தோஷத்துடனும், கவலையில்லாமலும் திறம்படச் செய்யும் காலம் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கலாம்.

---

# தென் இந்திய ஆசிரியர் சங்கம்

## 1954 அக்டோபர் மாதத்திய நாட்குறிப்புக்கள்

4-10-54 : தென்னிந்திய ஆசிரியன்—செப்டம்பர் 1954—பிரசுரம்.

14-10-54 : பத்திரிகைக் கமிட்டி மீட்டிங்.

„ கல்வி வாரப் புத்தகம் எல்லா ஆசிரிய சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டது.

23-10-54 : நிர்வாகக் கமிட்டி மீட்டிங்.

„ ஸ்ரீ என். டி. சுந்தரவடிவேலு, கல்வி இலாகா டைரெக்டர், தேநீர் விருந்தில் உபசரிக்கப்பட்டார்.

## திருச்சி ஜில்லா ஹரிஜன நலப்பள்ளி ஆசிரியர்களுக்கு, பொதுக்காரியதரிசியின் அறிவிப்பு

சென்னை ராஜ்ய ஹரிஜன நல டைரக்டர் அவர்களது L. Dis. 21367/53 Dated 27-7-54 தேதிய உத்தரவு, திருச்சி ஜில்லா ஹரிஜன நலப்பள்ளி ஆசிரியர்களின் சங்கம் 2-5-53 தேதிய பொதுக்கூட்டத்தில் ஒன்பது தீர்மானங்களின் மீதும் எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கீழே கண்டபடி காட்டுகிறது :—(ஷை ஒன்பது தீர்மானங்களும் "பாலர் கல்வி" 1953 மே—ஜூன் இதழில் வெளிவந்துளன).

தீர்மானங்கள் 1, 2, 3: விஷயமாக ஜில்லா கலெக்டர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும், தீர்மானம் 4: பொதுவான பாவலான கேள்வி என்றும், இதுவும் ஹரிஜன நல டைரக்டர் அவர்களின் கவனத்தில் இருக்கிறதென்றும், தீர்மானம் 5: அகாரணமாகவும், விசாரணையுமின்றி ஆசிரியர் எவரும் மாற்றப்பட்டிருக்கிறதில்லை என்றும், தீர்மானம் 6: விதிப்படி மாற்றப்படும் ஆசிரியர்களுக்குப் பிரயாணப் படி உண்டென்றும், ஆனால் அவர்கள் கேட்டுக்கொண்டால் வழங்கப்பட இருக்கும் என்றும், தீர்மானம் 7: G. E. F. பிடித்தம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் விண்ணப்பத்தின் பேரில் செய்யப்பட்டு வருகிறதென்றும், தீர்மானம் 8: பள்ளிகளுக்கு சர்வீஸ் தபால் ஸ்டாம்பு வழங்கும்படி ஜில்லா நல அதிகாரிகளுக்கு சமீபத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும், தீர்மானம் 9: ரூரல் ஏரியாவில் வேலை செய்பவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் அளிக்க தற்போது வசதி இல்லை என்றும் கூறுகிறது.

---


## தமிழ் உபபாட புத்தகங்கள்

### புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

**இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.**

## தேச பக்த மாலை

வித்வான் எம். சண்முகம் பிள்ளை
எழுதியது
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
அவர்களின் முகவுரையுடன் கூடியது

| | அணா | | அணா |
|---|---|---|---|
| 1. மகாத்மா காந்தி | 10 | 4. கவியரசி சரோஜினி | 8 |
| 2. கவியரசர் தாகூர் | 8 | 5. தேசீய கவிமணிகள் (பாரதியார், தாகூர், சரோஜினியார்) | 12 |
| 3. தேசிய கவி பாரதியார் | 8 | | |

எம். அனந்த நாராயணன், பி. ஏ., எல். டி.
எழுதியவை

6. வீர சிவாஜி அணா 10   7. சுவாமி விவேகானந்தர் அணா 12

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

Regd. No. M. 3473

THE

# S. I. T. U. PROTECTION FUND LTD.

**520, HIGH ROAD, TRIPLICANE, MADRAS-5**

(*Registered under the Insurance Act as a Mutual Insurance Co.*)

## Total Assets Exceed 12,00,000

**No. of Policy-holders over 4500**

Please remember that this is your own Insurance Society and that its members form, as it were, a co-operative group to enable one another mutually to make provision for their old age and their families.

There are five tables for 10, 15, 20, 25 and 30 years.

Teachers may take ONE to SIX units according to their ages.

One unit guarantees a benefit of Rs. 250/-, which goes on increasing by Rupees Five after every year of membership.

You will not find a cheaper Insurance Cover.

By taking a Policy in the Protection Fund, you strengthen the teachers' organisation and at the same time make provision for your old age and family.

For particulars write to :

THE SECRETARY.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press, Ltd., 109-C, Mount Road. Madras-18. Edited & Published by Sri S. Natarajan, for "The South India Teachers' Union," at 520, High Road, Triplicane, Madras-5.